# பண்டைத் தமிழர் கொடைப் பண்பும் மானுட மேம்பாடும்

***முனைவர் ஏ. பச்சையப்பன்***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
சென்னை

**மலர்: 4**

**இதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

*உலக மக்களையெல்லாம் ஒன்றிணைத்து ஒருகுடையின் கீழ் கொண்டு வந்து, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை எல்லாம் மறைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு மானுட வாழ்க்கையின் மகத்துவத்தையும் உண்மையையும் உணர்ந்தவர் தமிழர். தமிழர் வீரத்தையும் காதலையும் காலந்தோறும் இலக்கியங்கள் பறைசாற்றி வருகின்றன. உலகிலேயே வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை கொண்ட மொழி தமிழ். "யாதும் ஊரே யாவரும் கேளிர் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் "தமிழன் என்றோர் இனம் உண்டு, தனியே அவர்க்கோர் குணம் உண்டு என்பன போன்று தமிழரின் பெருமையும் தனித்தன்மையும் காலந்தோறும் வெளிப்பட்டுத் திகழ்கின்றன. பண்டைத் தமிழர் தம் கொடைப் பண்பால் மானுட சமுதாயம் மலர்ச்சிபெறச் செயலாற்றியதைத் தமிழ்ச்செவ்வியல் பனுவல்கள் வழிப் பறைசாற்றுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## கொடை விளக்கம்

கொடை என்பதை ஈகை என்ற சொல்லாலும் வழங்குவர். இல்லாதவர்களுக்கு ஒன்றைக் கொடுத்து உதவுவதே ஈகை எனப்படும். இது வாழ்க்கையில் சிறந்த அறச் செயலாகும். அறமாவது ஒருவருக்குப் பாவம் வரக்கூடிய வழியைத் தடுப்பதாகும். இறைநிலையை அடைவதற்குரிய ஞான மார்க்கம், கர்ம மார்க்கம் என்ற இரு வழிகளில் கர்ம மார்க்கத்தின் அடிப்படையே, இல்லாதோருக்கும் இயலாதோருக்கும் உதவி செய்தலே ஆகும். நல்ல சமுதாயத்திற்குரிய அறவழிகளைத் தமிழ் நூல்கள் காலந்தோறும் பறைசாற்றிக் கொண்டுதான் வருகின்றன. முன்பின் அறியா ஒருவராயினும் இயலாதோருக்கு எவ்விதமான எதிர்பார்ப்பும்

இன்றி ஒன்றைக் கொடுப்பதே சிறந்த ஈகையாகும். எதிர்பார்ப்புடன் செய்யக்கூடிய, கொடுக்கக்கூடிய எந்தவொன்றும், ஈகையாகா என்பதை வள்ளுவர் பெருமானும் மற்றையோரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

**அறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர உடைத்து** (குறள்.221)

**ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு ஈதல்**
(கலி.பா.133:1)

**அறமெனப் படுவது யாதெனக் கேட்பின் மறவாது**
**இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும்**
**உறையுளும் அல்லது கண்டதில்**
(மணி. 228-231)

**அறம் செய்தீமோ அருள் வெய்யோய்**
(புறநா. பா. 362)
**அறம் குறித்தன்று பொருள் ஆகுதலின்**
(புறநா.145)
**அறம் தலைப்பிரியா தொழுகலும்**
(அகநா.173)
**அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்** (நற்.69)
**அல்லவை தேய அறம் பெருகும்** (குறள்.163)

என்று அறத்தின் சிறப்பைத் தமிழ்ச் செவ்வியல் நூல்கள் வெளிப்படுத்துகின்றன. அறமாவது மனம், மொழி, செயல் என்ற மூன்றினாலுங் குற்றமின்றி இருப்பதாகும். அம்மூன்றினாலும் அடுத்தவர் வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுமாறு முறையே எண்ணுவதும், பேசுவதும், செய்வதும் கொடையாகவே கொள்ளப்படும் எனலாம். மேலும், கொடை என்பது அறத்தின் ஒரு கூறு எனினும் ஏற்புடையதாகும். கொடை என்பது உயர்குடியில் தோன்றியவர்களிடத்து இயல்பாகவே அமைந்திருக்குங் குணம் ஆகும். இதை,

**இனநன்மை இன்சொல் ஒன் றீதல்மற்**
**றேனை மனநன்மை என்றிவை யெல்லாம்......**
**இற்பிறந்தார் கண்ணேயுள"** (நாலடி.146)

என்னும் நாலடியார் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. எல்லாக் கொடையிலும் இன்சொல் வழங்குதலே சிறப்புடையதாகக் கருதப்பட்டது (பழ.98). ஒருவன் உண்மை பேசுபவனாக இருத்தல் என்பது கொடையைவிடச் சிறந்ததாகும். இதை, "வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை" என்று முதுமொழிக்காஞ்சி(1:4) குறிப்பிடுகிறது. மேற்கண்ட செய்திகள் மூலம் கொடை என்பது இல்லாதோருக்கு ஒன்றைக் கொடுப்பதும், இயலாதோருக்கு உதவுவதும், மனம், மொழியால் பிறர் நலனும் வளமும் சிறக்கச் செய்வதும் ஆகும் என்பது பெறப்படுகிறது.

## கொடையின் அவசியம்

பௌதிக உடலோடு இருக்கக்கூடிய இப்பிறப்புக்கு மட்டுமல்லாது மறுமைக்கும் துணையாக இருப்பது அறமேயாகும். அதனால், இளமை முதற்கொண்டே முடிந்த வகைகளில் எல்லாம் அறச் செயல்கள் செய்ய வேண்டும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்றால் அது முடியாதும் போகலாம் (பழ.6). இளமை நிலையானதன்று இன்பமும் நிலையானதன்று இன்பத்துக்குக் காரணமான செல்வமும் நிலையானதன்று. நாள்தோறும் துன்பவெள்ளம் மிகுந்துள்ளது. ஆதலால், இளமையும் இன்பமும் செல்வமும் நம்மிடம் நிலையாக உள்ளன என எண்ணுதல் கூடாது. அவை மறுமைக்குப் பயன்படாது. உழவர்கள் தாம் அறுவடை செய்த தானியத்தின் ஒரு பகுதியை அடுத்த ஆண்டு விளைச்சலுக்குத் தேவையான விதையைச் சேமித்து வைப்பது போல இந்த மனிதப் பிறவியிலேயே நல்லறங்களைச் செய்து மறுமைக்குரிய புண்ணியங்களைச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**இளமையும் நிலையாவால்; இன்பமும் நிலைபெறஅல்ல;
வளமையும் அதேபோல் வைகலும் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக்கு என்றும்
விளைநிலம் உழுவார் போல் வித்துநீர் செய்கொண்மின்**
என்று வளையாபதியும் *(41)*,

**"இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்"**
என்று சிலப்பதிகாரமும் *(30:199-201)*, எக்காலத்தும் ஒருவருக்குத் துணையாகு மாறான ஒன்றைத் தேடிக் கொள்ளுமாறு அறிவுறுத்து கின்றன. அந்த ஒன்றாவது அறத்தால் வரக் கூடிய புண்ணியம்தான். துறவு நிலையில் தவஞ் செய்வது கூட ஒருவற்கு எளிதாகும். ஆனால், இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு ஈகையுடையவனாயிருத்தல் அரிதான ஒன்றுதான். என்றாலும், இவ்வரிய பிறவியில் அவ்வரிய முயற்சியை மேற்கொண்டால்தான், எக்காலத்திலுந் துணையாகும் ஒன்றைப் பெறமுடியும் அல்லவா இவ்வரிய செய்தியை, "தவமெளிது தான மரிது" என்ற ஏலாதித் தொடராலும் *(3:1)* அறிந்து கொள்ளலாம்.

## கொடை அளிக்கும் முறைமை

கொடை அளிக்கும்போது வருபவர் குறிப்பறிந்து அளிக்க வேண்டும். உலகில் கொடுப்பவர் பலராயினும், வருபவர் குறிப்பறிந்து, அவர் கேட்காததற்கு முன்பே அவர் கருதி வந்ததைக் கொடுத்து உத வுவதே சிறந்த கொடையாகும் *(பழ.126)*. நாடி வரும் நண்பர் முதலாயினவர்களுக்கு உணவளித்தலோடு செய்ய வேண்டிய சிறப்புகள் யாதெனில், புன்சிரிப்புடன் இனிய மொழி பேசல், கால்கழுவ நீர் அளித்தல், உட்கார மனை கொடுத்தல், படுக்கப் பாய் கொடுத்தல், தங்க இடங் கொடுத்தல் என்பனவாகும் என்று கொடையைச் சிறப்புடன் அளிக்கும் முறைமைகளை ஆசாரக்கோவை*(54)* அறிவுறுத்துகிறது. இதனை,

**"முறுவல் இனிதுரை கால்நீர் மனைபாய்
கிடக்கையோ டிவ்வைந்து மென்பு தலைச்
சென்றார்க்கு ஊணொடு செய்யுஞ் சிறப்பு"**
என்னும் வரிகளால் அறியலாம். ஒருவர்க்கு ஒன்றைக் கொடுப்பதென்பது விருப்பத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். விருப்பமில்லை எனில் ஒன்றைச் செய்வதைவிடச் செய்யாமல் இருப்பதே சிறப்பாகும். ஒருவர்க்கு ஒன்றை வெறுப்புடன் கொடுத்தல் என்பது அது இல்லை என்று கூறுவதைவிடக் கொடியது ஆகும். இக்கருத்தைப் "பேணி லீகை மாற்றலிற் துவ்வாது" எனும் வரியில் முதுமொழிக்காஞ்சி*(4:4)* பதிவு செய்கிறது. மேலும், பிறருக்கு விருப்புடன் கொடுப்பதாயினும் கொடுக்கும் பொருள் அறவழியில் வந்ததாகவும் கொடுப்பதும் அறவழியில் கொடுப்பதாகவும் இருக்க வேண்டும். அறவழியில் ஈயாதது ஈகையாகவே கருதப்பட மாட்டாது. இதை, "அறத்தாற்றி னீயாத தீகை யன்று" *(5:8)* என்ற தொடர் மூலம் அறியலாம். ஒன்றை ஒருவருக்குக் கொடுக்கும் போது, கொடுத்த அளவினால் அந்நபர் மகிழ்ச்சி அடைபவராக இருக்க வேண்டும். கொடுத்த அளவினால் மகிழாதவர்க்குக் கொடுக்காமல் இருப்பதே நலம் பயக்கும். அவ்வாறல்லாமல் அத்தகையவருக்குக் கொடுத்தால் அது துன்பந்தருவதாகவே அமையும். "ஈத்த வகையாலுவவாதர்க் கீப்பின்னா" என்ற இன்னா நாற்பது *(21:1)* தொடர் இங்கு உணரத்தக்கதாகும்.

## கொடை ஆகாதன

பயன் நோக்கிச் செய்கின்ற எந்தவொன்றும் கொடை ஆகாது. புகழ் ஒன்றையே கருத்தாகக்கொண்டு, ஈகின்றவர்களின் கொடையானது பயனற்றதாகும் *(பழ.15, 172)*. பயன் நோக்கிச் செய்வதும் புகழ் ஒன்றையேக் கருத்தாகக் கொண்டு

செய்வதும் கொடை ஆகாதவை என்று தமிழ்ச்செவ்வியல் பனுவல்கள் வலியுறுத்து கின்றன. பிறர்க்கு உதவாமலேயே, ஒருவர் யான் பிறர்க்கு உபகாரம் செய்கின்றேன் என்று பொய்யாகக் கூறுவது பிறரை வருத்துவதை விடக் கொடியது ஆகும் (முதுமொழி.4:6). ஒருவன் தன்னால் கொடுக்க இயலாத ஒரு பொருளை இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லிவிடுவது எவர்க்கும் பழியாகாது அது இயல்பேயாகும். ஆனால், யாசி த்தவன் ஆசையில் வருந்தும்படி, உதவுபவனைப் போல் தோன்றிக் காலம் நீட்டித்துப் பின் கொடுக்காமல் ஏமாற்றுவது குற்றம் செய்த நன்றியைக் கொன்றவரது குற்றம் போன்ற தீமையுடையதாகும் (நாலடி.111). "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவர் வாக்கும் (110) எண்ணுவதற்குரியதாகும்.

கொடை, என்பதை மனம், மொழி, மெய் என்ற மூன்றாலுஞ் செய்யலாம். பொருளால் மட்டுந்தான் செய்ய வேண்டுமென்ப தொன்றில்லை. எனவே, வறுமை நிலையில் உள்ளவர் தம் வறுமையைப் போக்கிக்கொள்ள நினைக்க வேண்டுமேயல்லாமல் தானும் கொடை அளிப்போம், வள்ளல் தன்மை உடையவராகத் திகழ்வோம் என்றிருந்தால் அதுதுன்பமுடையதாகவே அமைதல் கூடும். அதனால், துன்பமுடையவர் கொடுக்குங் கொடையும் வேண்டப்படாததாகும்.

**"இடும்பை யுடையார் கொடையின்னா"**
**(இன்.நாற்.8:3)**

**"கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மையின்னா**
**(இன்.நாற்.39:1)**

பயனும் புகழும் நோக்கிச் செய்வதும், உதவாமலேயே உதவுவதாகக் கூறுவதும், உதவுவேன் எனச் சொல்லி உதவாது ஏமாற்றுவதும், துன்பத்தாலும் பொருள் இல்லா நிலையிலும் இருந்து கொண்டு தாமும் வள்ளல்தன்மை உடையோம் எனச் செயல்படுவதும் கொடைக்கு ஆகாதனவாகக் கருதப்பட்டன என்பது மேற்கூறிய சான்றுகள் மூலம் தெளிவாகின்றன.

**கொடைக்குரியன**

எவையெல்லாம் கொடையளிப்பதற்குரியன என்று நம் முன்னோர் அறிந்திருந்தனர். பண்டைய தமிழகத்தில் கொடைக்குரியனவற்றுள் முதன்மையானதாக உணவு கொடுத்தலே இருந்தது. உணவளித்தலே அறங்களிலெல்லாம் தலைசிறந்ததாகக் கருதப்பட்டது. இதனை,

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**(புறநா.18:19)**

**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**
**(மணி.11:95:96)**

என்னும் வரிகளால் அறியலாம். மேலும், பசிப்பிணி தீர்த்தோரின் செயலை அளவிட்டுப் புகழ முடியாது புகழ்வதற்கு வார்த்தைகளும் இல்லை. அந்த அளவிற்குப் பசி தீர்க்குஞ் செயலானது சமுதாயத்தில் உயர்தரமானதாகக் கருதப்படுகிறது. உணவு, யானை, குதிரை, பொன், பெண், பசு என்பன போன்றவை ஈகைப் பொருள்களாக இருந்தன. யார்யாருக்கு எவற்றை ஈகையாக அளிக்கலாம் என்றெல்லாம் பண்டைத் தமிழர் பகுத்து வழங்கினர். அவர்கள் மக்களைத் தவம் செய்பவர், தவம் செய்யாதவர் என்று இருவகையில் பகுத்திருந்தனர். தவம் செய்யாதவர்களுக்கு யானையும், குதிரையும், பொன்னும், கன்னிகையும், ஆன் கூட்டமும் மற்ற ஈகைப் பொருள்களையும், பெருந்தவத்தினர்க்கு பசுவின் நெய்யொடு கூடிய உணவையும் அளித்தனர். இவ்வாறு செய்யக் கூடியவன் குபேரனைப் போல் பெருஞ்செல்வமுந் தனிமதிப்பும் உடையவனாய் வாழ்வான் என்றும் ஏலாதி(49) கூறுகிறது.

**கொடைக்குரியோர்**

யாசித்து வருபவர்களுக்கு மட்டுமல்லாது மற்று யாருக்கெல்லாம் கொடை அளிக்கலாம் என்றும் பண்டைத் தமிழர் சுட்டிக் கூறியுள்ளனர். கொடைக்குரியவர்களாகத் தமிழ்ச் செவ்வியல் பனுவல்கள் வழி அறியப்படுபவர்கள் விவரம் வருமாறு:

வறியவர், இரப்பவர், துறந்தார் (கைவிடப்பட்டவர்), துறவாதார் (விருந்தினர்), துப்பிலார் (வறியவர்), இறந்து தோன்றார் (காணப்படாத தென்புலத்தார்), ஈடு அற்றார் (தனக்கொப்பில்லாத ஏழைகள்), இளையர் (துணையற்ற சிறுவர்கள்), சிறந்தவர் (சான்றோர்), கால் இல்லார் (முடவர்கள்), கண் இல்லார் (பார்வையற்றவர்கள்), நா இல்லார் (ஊமைகள்), யாரையும் பாலில்லார் (ஒருவரையும் தஞ்சார்பில் உடையராய் இல்லாதவர்), பற்றிய நூல் இல்லார் (பதிந்த நூலறிவு இல்லாதவர்), இல் இழந்தார் (தமது இருப்பிடம் இழந்தவர்), ஈண்டிய செல்வம் இழந்தார் (பெருகியிருந்த செல்வத்தை இழந்தவர்), நெல் இழந்தார் (விளைந்த நெல்லை இழந்தவர்), ஆன்நிரை இழந்தார் (பசு மந்தையை இழந்தவர்), கடம்பட்டார் (கடன்பட்டவர்கள்), காப்பில்லார் (தம்மைக் காப்பவர் எவரும் இல்லாதவர்), கைத்தில்லார் (செல்வம் இல்லாதவர்), தம் கால் முடம்பட்டார் (தம்முடைய கை, கால்கள் முடம்பட்டவர்கள்), மூத்தார் (கிழத்தன்மை அடைந்தவர்), மூப்பு இல்லார் (பெற்றோர் முதலிய மூத்தோர்கள் இல்லாதவர்), பார்ப்பார் (அந்தணர்), பசித்தார் (பசித்தவர்), தவசிகள் (தவஞ் செய்கின்றவர்), பாலர்கள் (குழந்தைகள்), கார்ப்பார் (பிறரால் வெறுக்கப்படுகின்றவர்கள்), தமை காப்பு யாதும் இல்லார் (தம்மைக் காத்துக் கொள்ளுதற்குரிய ஆதரவு சிறிதும் இல்லாதவர்கள்), தூப்பாலநிண்டார் (அழுக்கற்ற நல்லொழுக்கத்தில் மிக்கவர்கள்), ஈன்றார் (பிள்ளையைப் பெற்றவர்கள்), ஈன்கால் தளர்வார் (பிள்ளையைப் பெறுகின்ற காலத்தில் வேதனைப்படுகின்றவர்), சூலார் (கருவுற்றிருக்கின்றவர்), குழவிகள் (குழந்தைகள்), மான்றார் (அறிவு மயங்கியவர்கள்), வளியால் மயங்கினார் (வாத நோயால் வருந்துகின்றவர்), தளையாளர் (தாம் செய்த குற்றத்திற்காகக் காலில் தளையிடப்பட்டவர்கள்), தாப்பாளர் (ஒறுக்கப்பட்டு வருந்துகின்றவர்கள்), தாழ்ந்தவர் (மேல்நிலையிலிருந்து முன்வினையால் தாழ்வடைந்தவர்கள்), பெண்டிர் (பெண் மக்கள்), உளையாளர் (நோயால் வருந்துபவர்கள்), ஊண் ஒன்றும் இல்லார் (சாப்பாடு சிறிதும் இல்லாதவர்கள்), கடும் சிரங்கு நோயுடையார் (கொடிய சிரங்கு நோய் உடையவர்), வெள் தொழு நோயுடையார் (வெள்ளைக்குட்ட நோய் உடையவர்), கல் நோய் உடையார் (கல்லடைப்பு நோய் உடையவர்), வளி நோய் உடையார் (வாத நோய் உடையவர்), பெரும் சிரங்கு நோய் உடையார் (கழலை நோய் உடையவர்), பேர்வயிற்றுத் தீ நோயுடையார் (பெரிய வயிற்றெரிச்சல் நோய் உடையவர்), அருந்தவத்தவர் (அரிய முயற்சி உடையார்), நடப்பார் (வழி நடப்பவர்), நல்ல பொறை தாங்கினார் (மிக்க சுமை தாங்கி களைத்தவர்), கேளிர் (உறவினர்), உடல் சார்ந்த வானகத்தார் (வானுலகிலுள்ள தென்புலத்தார்), மறுதலையார் (அயல் நாட்டிலிருந்து வந்தவர்), புலையாளர் (தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்), புண்பட்டார் (உடம்பிற் புண்பட்டவர்கள்), போக்கில் நிலையாளர் (அயல்நாடுகளுக்குச் செல்வதிலே நிலையாயிருப்பவர்கள்), நீர்மை இழந்தார் (தங்கள் மேல்நிலையை இழந்தவர்), தலையாளர் (சிறந்த நிலையினை உடையவர்கள்), தாயை இழந்த பிள்ளை, கணவனை இழந்த மனைவி, வாணிகம் புரிந்து முதற்பொருளை இழந்தவர், உணவுக்கு ஆதரவான செல்வப் பொருளை இழந்தவர், பசு, சிறை (பறவைகள்) என்பன போன்றோர்கள்

எல்லாம் கொடை பெருவதற்குரியவர் என்றும், அத்தகையவர்களுக்குக் கொடை அளித்தலே சிறந்த வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்றும் ஏலாதி (*35, 36, 52-57, 70, 71, 78, 80.*), ஆசாரக்கோவை(*21*) உள்ளிட்ட நூல்கள் கூறுகின்றன.

## கொடை அளிப்போர்

கொடை என்பது இருப்போர் இல்லாதோருக்குக் கொடுப்பதாகும். பொருளுடையான் ஈகை செய்யவில்லை என்றால் அவனை இவ்வுலகம் பழிக்கும். ஆனால், வறுமை உடையவனை ஈகை உடையவன் அல்ல என்று யாரும் பழிக்க மாட்டார்கள். இதனை, "வறியான் வள்ளிய னன்மை பழியார்" (முதுமொழி.*3:9*) என்னும் வரியாலும் அறியலாம்.

கொடை அளிப்போர், தான் கொடையாளியாகத் திகழ வேண்டும் என்ற எண்ணத்தோடல்லாமல், கொடை பெறுபவரின் குணம் அறிந்து, தன் கொடையால் அவருக்கும் பிறருக்கும் ஏதேனும் நன்மை உண்டாகும் அளவிலேயே செயல்படுதல் வேண்டும். உள்ளத்தால் ஆக்கமும் நடத்தையில் தூய்மையும் இல்லாத தீயவனுக்கு அரசன் உட்பட யாரும் பொருள் வழங்கக் கூடாது. ஏனெனில் அவ்வாறு வழங்கினால் பலர் அதனால் துன்பம் அடைவார்கள் (பழ.*154*) பொருளுடையவன் செய்யக் கூடிய ஈகையே இனிதாகக் கருதப்பட்டது (இனி.நாற்.*2:1*). ஒருவன் தொடர்ந்து ஈகை செய்ய வேண்டுமெனில் அவன் தொடர்ந்து முயற்சி உடையவனாகத் திகழ்ந்து வருவாய் வரும் வழியைப் பெருக்க வேண்டும். இல்லையெனில், "தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாள்ஆண்மை போலக் கெடும்" என்ற வள்ளுவர்(*166*) வாக்கைப் போலத்தான் ஆகிவிடும்.

ஒரு காலத்தில் பிறருக்குப் பொருள் கொடுத்து காத்த ஆண்மைத் தன்மையுடையவர்கள் பிற்காலத்தில் வறுமை அடைந்தபோது அவனைக் காணுதல் என்பது மனம் பொறுக்காத செயலாக இருந்தது என்பதை, "... கொடுத்தளிக்கும் ஆண்மை யுடையவர் நல்குரவு ... காண அரியவென் கண்" (திரிகடு.*71*) என்று திரிக டுகம் குறிப்பிடுகிறது. என்றாலும், ஒவ்வொருவரும் தன் தகுதிக்கேற்ப ஈகை செய்வதே சிறப்புடைத்தாகும்.

## கொடையின் அளவு

கொடுப்பவர் - பெறுபவர் என்ற இருவருள் கொடை என்பது கொடுப்பவரின் தகுதியை ஒட்டிய அளவினதே ஆகும். கொடுக்கும் கொடையின் அளவு இரந்து வந்து நிற்பவர்களுடைய தகுதியளவாகவே இருக்கும் என்பவர்கள் கொடையின் இயல்பையே அறியாத மூடர்கள். அது அங்ஙனம் அமைவதன்று. இரவலர்க்கு எதனையும் இல்லையென்று ஒளியாதவர்களாய்க் கைவண்மையினை மேற்கொண்ட புரவலர்களின் சீர்மையினுடைய அளவை ஒட்டியதாகவே அது எப்போதும் விளங்கும். நீரில் உள்ள மலர் நீரளவாகவே இருப்பது போலவே, சிறந்த செயல்கள் எல்லாம் அவற்றைச் செய்பவரின் மன அளவினதாகவே இருக்கும் என்பதை, எழுதப்படாச் சட்டமாக விளங்கும் பழமொழி(*274*) குறிப்பிடுகிறது.

**"இரவலர் தம்வரி சை என்பார் மடவார்;**
**கரவலராய்க் கைவண்மை புண்ட - புரவலர்**
**சீர்வரைய வாகுமாம், செய்கை சிறந்தெனைத்தும்**
**நீர்வரைய வாநீர் மலர்"**

கொடை அளிப்பதற்குத் தேவையான வற்றைப் புறத்தேவை, அகத்தேவை என்று இருவகையாகப் பகுத்துக் காணலாம். புறத்தேவையாவது பொருள் தேவையாகும்.

அகத்தேவையாவது உலக உயிர்களிடத்து அன்பு மிகுதியாகக் கொண்டிருப்பதாகும். உயிர்களிடத்து அன்பு மிகுதியாகக் கொண்டிருப்பவர்களுக்குப் பிறர் விரும்பிய தொன்றை விருப்பத்தோடு கொடுத்தல் எளிதாகும். "ஈரம்வெய் யோர்க்கு நசை கொடை யெளிது" என்னும் முதுமொழிக் காஞ்சி (8:3) தொடர் இச்செய்தியை மெய்ப்பிப்பதைக் காணலாம். மேலும், ஒவ்வொருவரும் தன் வாழ்நாளில் தான் செய்யும் திருமண நாள், தேவர்கட்குச் சிறப்பு நாள், பிதிரர்கட்குச் சிறப்புச் செய்யும் நாள், விழா நாள், வேள்வி செய்யும் நாள் என்று ஐந்து வகை நாட்களிலும் தானம் செய்வதுடன் விருந்தினர்க்கு உணவு இடுதல் வேண்டும் என்று பெருஞ்சோறு அளிக்குங் காலத்தை ஆசாரக் கோவை(48) குறிப்பிடுகிறது.

**"கல்லியாணந் தேவர் பிதிர்விழா வேள்வியென்(று) ஐவகை நாளும் இகழா தறஞ்செய்க பெய்க விருந்திற்குங் கூழ்"**

கொடை அளிப்போர் பொருட் செல்வத்துடன் உயிர்கள் மீது கொள்ளும் அருட்செல்வமும் பெற்று கொடை அளிக்க வேண்டும் என்பதைத் தமிழ்ச் செவ்வியல் பனுவல்கள் அறிவுறுத்துகின்றன.

## செல்வத்தின் பயன்

கல்வியுகமாகத் திகழும் இன்றைய யுகத்தில் மனிதர்களின் நோக்கு செல்வம் சேர்த்தலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது எனலாம். ஏனெனில் செல்வத்தால் ஆகாதது எதுவுமில்லை. அனைத்தும் செல்வத்தால் ஆகும். எப்படியெனில் செல்வத்தால் அறம் செய்யலாம் பொருள் பெறலாம் அதன்வழி இன்பம் அடையலாம். இம்மூன்றும் நன்னெறியில் நடக்குமாயின் வீடுபேறு கிட்டுவதும் எளிதாகும். வீடுபேற்றை விட உயர்ந்தது வேறொன்றில்லை அல்லவா? செல்வத்தை அருட்செல்வம், பொருட்செல்வம் என இருவகையாகப் பார்க்கலாம். இவ்விரண்டில் அருட்செல்வத்தைத் தேடுதலே இன்பமானதாகும். இங்கு, அருட்செல்வத்திற்கான வழியாகப் பொருட்செல்வம் இருப்பதையும் அறிவுடையோர் அறிவர். மயக்க உலகில் சிக்கித் தவிக்கும் மாந்தர்கள்"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும் செல்வமாகக் கருதி அதற்காகவேதன் உழைப்பு முழுவதையும் செலவிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இதையெல்லாம் சான்றோர்கள் செல்வமாகக் கருத மாட்டார்கள். அவர்கள், தன்னைச் சார்ந்தோரைத் துன்பப்படாமல் காத்தலையே சிறந்த செல்வமாகக் கருதினர். செல்வத்தைத் தேடினாலும் அதைப் பிறர்க்குக் கொடுக்கும் பொருட்டே தேட வேண்டும். அவ்வாறு செய்வது நரக உலகத்தைச் சேராமைக்குக் காரணமாகிய வழியும் ஆகும் (திரிகடு.90). கடல் சூழ்ந்த உலகம் முழுவதையுமே ஒன்றாக ஒரு குடைக்கீழ் ஆண்ட பேரரசர்கள் கூட, திருவிழா நடந்த ஊரிலே நிகழ்ந்த கூத்தைப்போல மறுநாள் வீழ்ச்சியுற்று அழிதலைப் பார்த்தும் "இருப்பது பிறருக்கு உதவியாகப் போகட்டும்" என்று ஒரு பொருளையேனும் மனதாரக் கொடுத்து மகிழாதவனுடைய செல்வமானது அழகும் வடிவும் உடையவளான ஒரு பெண் கண் இழந்த குருடியாக இருப்பதைப் போன்றதாகும் என்று ஈகையே செல்வத்திற்கு அழகு என்கிறது பழமொழி (20).

குறையில்லாத பெரும் பொருளைத் தேடிப்பெற்ற போது அப்பொருளைத் தகுதியுடையோர்க்குக் கொடுத்தலே இனிமையானதாகும். இதை, "முட்டில் பெரும் பொருளாக்கியக்கால் மற்ற தக்குழி யீத லினிது" (இனி.நாற்.19:3:4) என்பதனாலும் அறியலாம். செல்வத்தின் பயனே தக்கவர்க் ஈதல் ஆகும். தகுதியுடையோர்க்குக் கொடுப்பதனால் கொடுப்பவரின் செல்வமும் குறையாது என்று பழமொழி (29) அறிவுறுத்துகிறது.

தக்கோர்க்கு ஈயும் போதும், தக்கவழியில் ஈதல் வேண்டும். அதுதான் பொருளைப் போற்றி வாழும் வழியாகும். "ஆற்றின் அளவறிந்து ஈக அது பொருள் போற்றி வழங்கும் நெறி" என்று பொருளைப் போற்றி வாழும் நெறியாக அளவறிந்து ஈதலைக் குறிப்பிட்டு, நல்வழிகாட்டுகிறது வள்ளுவம்(477). செல்வத்தின் பயனாவது ஈதலாகும். ஈதலைத் தக்கோர்க்குத் தக்க வழியில் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதே பொருளைப் போற்றி வாழும் நெறியாகும் என்பது மேற்காணும் செய்திகள் மூலம் அறிய வருகின்றன.

### கொடையின் பயன்

உயர்ந்தோர் எனப்படுபவர் தன்னால் முடிந்த உதவிகளை மற்றவர்களுகுச் செய்ய வேண்டும் உலகத் உயிர்களையெல்லாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும் தம்மிடம் இரப்பதற்கு ஏந்திய கையை இல்லை என்று மறுக்காமல் மிகச் சிறியதாயினும் திரும்பத் தரவல்ல வல்லமை இல்லாத வறியவர்க்கு அளிப்பதே ஆணின் கடமையாகும். ஒருவன் தன்னால் அளிக்கப்படும் பொருள் மிகச் சிறியது என்று எண்ணாமலும், அதனால், இல்லை என்று சொல்லிவிடாமலும் பயனுள்ள அறத்தை ஏற்று வரும் எல்லாரிடத்தும் எக்காலத்தும் செய்துவரவேண்டும். இருக்கும் பொருளை மற்றவர்க்கு அளிக்காமல் தாமே இறுக்கமாகப் பிடித் திருக்காமல் பலருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ண வேண்டும். எதையும் ஓரிடத்து வைக்கக் கூடாது. தம்மிடத்து மிகுதியான செல்வம் இல்லாத போதும் தம்மால் கூடிய அளவில், பொருளுள்ள காலத்தைப் போல, மிகவும் மகிழ்ந்து ஒருவருக்கு ஒன்றை இனிதாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுப்பவர்களுக்குச் சுவர்க்க உலகக் கதவுகள் திறந்தே இருக்கும் என்கிறது நாலடியார்(91). நம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்குக் கொடுத்துத் தானும் அனுபவித்தாலும் பொருள் வந்து திரண்டு சேருங்காலத்தில் சேரும். நல்வினையானது போய்விட்டால், செல்வத்தை எவ்வளவு தான் இறுகப் பிடித்தாலும் நில்லாமல் போய் விடும். இந்த இயல்பை அறியாதவர், வறுமையில் வாடித் தம்மை அடைந்தவரின் துன்பத்தைத் தம் பொருளை அளித்து நீக்க மாட்டார் என்பதையும் நாலடியார்(93) பதிவு செய்கிறது.

முன்பிறவியில் தம்மிடம் வந்து யாசித்தவர்களுக்கு உணவு கொடுக்காதவரே இவ்வுலகத்தில் தனக்கென்று அடுப்பு வைத்து சமைக்காமல் பிச்சை எடுக்கும் நிலைக்கு உள்ளாவர் என்று சான்றோர்உரைப்பர். எனவே, நாள்தோறும் நம்மிடம் உள்ள பொருள்களுள் இம்மி அளவேனும் அறத்திற்காகத் தந்து பின் உண்ண வேண்டும் என்றும் வலியுறுத்கிறது.

### ஈதலினும் இரட்டிப்புப் பயன்

ஒருவன் தன்னால் கொடுத்தற்குரிய பொருளை மறுமைப்பயன் இம்மைப்பயன் என்பனவற்றை நோக்கி இரந்தவருக்குத் தக்க முறையில் அளிக்க வேண்டும். அவ்வாறு அளிப்பது, வறுமையால் அளிக்க முடியாத போதும் தான் மற்றவரிடம் இரவாது இருக்கிற தன்மை, அந்த வறிய காலத்தில் கொடுத்தலைவிட, இரண்டு மடங்கு தகுதி உடையதாகும். இதனை, "... வறுமையால் ஈதல் இசையா தெனினும் இரவாமை ஈதல் இரட்டி யுறும்" என்று நாலடியார்(95) குறிப்பிடுகிறது.

அபயமென்பார்க் இடங்கொடுப்பானது பெருமை பொருந்திய வீரம் விரும்பத்தக் கதாகும். கேட்கப்படும் அறங்கள் பலவற்றிலும் முதன்மை யானதாக, வறுமையால் வருந்துவோருக்கு ஈதல் என்பது முன்னோரால் குறிப்பிட்டுச்

சொல்லப்படுகிறது (திரிகடு.41:1). ஈகை என்பது ஒருவரின் அன்பை வெளிப்படுத்தக் கூடியதாகும். "ஈர முடைமை யீகையி னறிப" என்பர் சான்றோர் (முதுமொழி.2:2). ஒருவன் தன் மனத்தில் அன்புடையவன் என்பது அவன் பிறர்க்குக் கொடுக்குங் கொடையால் அறியப்படும் என்ற செய்தியை மேற்காணுந் தொடர் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

வரையாது கொடுத்தலை அணியாக மேற்கொண்டவனிடம் உள்ள பொருள், பொந்தில்லாமல் வயிரம் பற்றிய மரம் போல உறுதியானது என்றும், தானத்தைக் கொடுக்கின்ற பெருஞ்செயலானது அறத்தின் பயனை நீங்காதபடி கட்டுகின்ற கயிறாகும் என்றும் கொடையின் பயன் (திரிகடு.75,23) சிறப்பிக்கப்பட்டுள்ளது. "அறஞ்செய்ய அல்லவை நீங்கிவிடும்" என்பர் (பழ.23). நல்ல தருமங்களைச் செய்தால் பழைய பாவங்கள் எல்லாம் நீங்கும். அறம் செய்பவரும் தகுதி அறிந்து அதனைச் செய்தால் அவர்கள் செல்லும் மறுமை உலகத்தில் அதனால் நன்மை உண்டாகும். இனிய சொற்களுடன் தகுதியுடையவர்களுக்குப் பொருளை உதவிக் காக்கவல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும் என்பார் வள்ளுவர் (387). மேலும், ஈகையால் இம்மை இன்பமும், பயன் கருதிய தவத்தால் விண்ணுலகமும், பற்றடையாத தவ ஒழுக்கத்தால் (மெய்யுணர்வால்) வீடுபேறும் உண்டாகும் என்பதை, "கொடையினாற் போகஞ் சுவர்க்கந் தவத்தால் அடையாத் தவத்தினால் வீடு" என்னுங் குறள் வழிக் கூறி, கொடையின் பயனைத் தெளிவுபடுத்துகிறார். தன்னுறுப்பறுத்துக் கொடுப்பது போலுங் கொடையுவந்து, தன் மனத்திலுள்ள செருக்கையும் அறுத்தவன் விண்ணகத்திலுள்ள தேவரினுஞ் சிறந்தவனாகக் கருதப்படுவான் என்றனர் சான்றோர். ஒரு மனிதர் தேவரைவிடச் சிறந்தவராக மதிக்கப்படுவதற்கும் கொடை பயன்படுவதை அறியலாம். மேலும், யாசிப்போர்க்கு அவர் வேண்டியவற்றைக் கொடுப்பதைவிட அதிகமாக அடையும் மேன்மை இல்லை என்பதை, "இரப்போர்க் கீதலி னெய்துஞ் சிறப்பில்லை" என்று உணர்விக்கிறது முதுமொழிக்காஞ்சி (6:10).

## இருவகைக் கொடை

ஒரு நாட்டில் வழங்கப்படுங் கொடையை ஆட்சியாளர் செய்யுங் கொடை, இல்லறத்தார் செய்யுங் கொடை என்று இருவகையாகப் பகுத்தறியலாம். இவ்விருவகையினரும் தமக்குரிய முறையில் கொடையளிக்கும்போது அதற்கேற்ற பலனை அடைவர் என்பதும் பண்டைத் தமிழ்ப் பனுவல்கள் சுட்டுகின்றன. எள்ளும், பஞ்சினாலாகிய அரைஞானும், எண்ணெயும், உடுத்தும் உடையும், பணமும், போர்வையும் இவற்றுடன் உணவும் ஏற்றுக் கொள்வீர்களாக என்று சொல்லி அன்பு கூர்ந்து கொடுத்தவன் தன் மனைவி முதலிய சுற்றத்தாரோடு கலந்து இன்பம் பொருந்தி வாழ்வான் என்று இல்லறத்தார் செய்யுங் கொடையின் பயன் சுட்டப்படுகிறது. ஆட்சியாளர் செய்யுங் கொடையின் பயன் ஆய்வில் முன்னரே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## படிப்பினும் சிறந்தது கொடை

படிப்பைவிடச்சிறந்தது கொடையாகும். கருவி என்ற அளவிலே ஒன்றாயினும் மரம் வெட்டும் கருவி மயிர் சிரைக்க உதவாது. அதுபோலப் படிப்பு என்ற அளவிலே ஒன்றாயினும் பொருளின் பயனை உணர்ந்து அறம் செய்யாதவரின் படிப்பு நல்ல படிப்பே ஆகாது (பழ.343). எனவே "செல்வத்துப் பயனே ஈதல்" என்பதும், "கொடுப்பவர் கெடுவதில்லை" (பழ.179) என்பதும் இங்கு அறியவரும் முதன்மைச் செய்திகளாகும். மேலும், கொடையினால்

ஏற்படும் பயன்களாக இவ்வாய்வின் மூலம் அறியவருவன: உயர்ந்தோர் எனச் சிறப்பிக்கப்படுவர் இல்லாதோருக்கு அளிப்பது ஆணின் கடமை சுவர்க்க உலகம் கிட்டும் ஒருவரின் உள் அன்பை வெளிப்படுத்தும் கொடையுடையவனின் பொருள், பொந்தில்லாது வயிரம் பற்றிய மரம் போன்று உறுதியாக இருக்கும் அறத் தின் பயனை நீங்காது காக்கும் அல்லவை நீங்கும் (பாவங்கள் நீங்கும்) புகழ் ஏற்படும் அவற்றிற்கேற்ப உலகம் இன்பம் தரும் இம்மை இன்பம் ஏற்படும் தேவரைவிடச் சிறந்தவனாகக் கருதப்படுவான் தன் சுற்றத்தாரோடு கலந்து இன்பம் பொருந்தி வாழ்வான் படிப்பைவிடச் சிறந்தது உயர்ந்த மேன்மையைக் கொடுக்கும் என்பனவாகும்.

## கொடையின்மையின் துன்பம்

ஈகைக் குணம் இல்லாதவர்கள் எவ்வளவு அழகிய நிலையில் இருப்பினும் அந்த அழகு வேண்டப்படாததாகவே கருதப்படும். அது துன்பந் தருவதாகவும் அமையும். பொருளில் பற்று கொண்டிருக்கும் உள்ளத் தின் ஈயாத்தன்மை என்பது எதனோடும் சேர்த்து எண்ணத்தகாத ஒரு தனிக் குற்றமாகும். தன் யாசகர்களுக்குக் கொடுக்கக்கூடிய பொருளை இல்லையென்று மறைத்தால், அதைவிடத் தீமையானது ஒருவருக்கு வேறொன்றும் இல்லை. வறியவர்க்கு ஒன்று கொடுத்து உதவாது கழிந்த நாள் அறிவுடையார்க்கு நினைக்குந்தோறும் நோயாகும் என்கிறது திரிகடுகம்.

தன்னிடத்தில் வந்து இரந்தவர்க்குக் கொடுப்பதற்கு இசையும் பொருளை, அன்பு இல்லாதவனாகி மறைத்து இல்லையென்று சொல்லுஞ் செல்வன் உடல் அற்று நீங்கி நரகத்தில் விழுவார். ஈயாதவனிடம் பொருளிருப்பது குருடனருகே அழகிய பொருள்கள் இருப்பதுபோலப் பயனற்றது. கருமியின் செல்வம் அவனுக்கும் பிறர்க்கும் பயன்படாமல் அழியும் என்று கொடையின்மையின் துன்பங்களைச் சொல்லி, இன்பவழி காட்டுகின்றன தமிழ்ச் செவ்வியல் பனுவல்கள். இதனை,

***வண்மை யிலாளர் வனப்பின்னா***
***(இன்.நாற்.912)***

**பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்று அன்று (குறள்.438)**

**இயைவது காத்தலிற் கொடுமை யில்லை**
**(முதுமொழி.6:5)**

***... இல்லார்க்கொன்***
***றீயா தொழிந்தகன்ற காலை நோயே***
***யுரனுடை யார்க்கு (திரிகடு.44)***

***... அன்பின்றி***
***யேற்றார்க் கியைவ கரப்பானும்***
***நிரயத்துச் சென்றுவீழ் வார் (திரிகடு.45)***

என்ற தொடர்களாலும் அறியலாம். தக்கோர்க்குத் தக்கவை கொடுத்து வாழும் வாழ்வே தகுதியுடைய வாழ்வு என்பதை இதன் மூலம் அறியலாம்.

## இரத்தல்

இரப்பவர்க்கு ஈந்து வாழுஞ் சிறப்பினைக் கூறும் பண்டைத் தமிழ்ப்பனுவல்கள், இரத்தலின் தன்மையையும் கூறத் தவறவில்லை. இரத்தல் என்பது சங்க மருவிய காலத்தில் இழிவானதாகக் கருதப்பட்டது. ஒருவரிடத்து ஒன்றை யாசித்தலை விட அவமானம் வேறொன்றில்லை என்பதை,

**இரத்தலின் னூஉங் கிளிவரவில்லை**
**(முதுமொழி.6:9)**

என்னும் வரி அறிவிக்கின்றது. இரத்து உண்ணுதலுக்குப் பலராகச் செல்லுதல் கூடாதாம். அவ்வாறு செய்தல் கொடுக்க நினைப்பவனையுங்

கொடுக்காது செய்துவிடும் என்கிறது பழமொழி. மேலும், கொடுத்து உதவுங்குணம் இல்லாதவரிடத்து இரப்போர் செல்லுதல் கூடாது அத்தகையவரிடம் செல்வது துன்பந் தருவதாகவே அமையும். சங்க மருவிய காலத்தில் இரந்தவர்களை வருத்திய நபர்கள் சிலரும் இருந்திருக்கிறார்கள். அவ்வாறு செய்வது மிகக் கொடுமையானதாகக் கருதப்பட்டது. மிகவும் வறுமைப்பட்டு அதன் துன்பத்தைப் பொறுக்க முடியாதும் போயின் ஒருவர், தன் நிலைமையை உணருமாறு சொன்னதற்குப் பின்னரும், அவருக்கு நல்லது செய்பவர் போலக் காட்டி, முடிவிலே அவருடைய ஆர்வமெல்லாம் கெட்டழிய வலிமையான செயலைச் செய்தல் கொடுமையாகும் என்கிறது பழமொழி (385). இரத்தல் இழிவான செயல் இரந்தவர்க்கு இருப்பவர் கொடுத்து உதவாதது அதைவிட இழிவான செயல் ஆகும்.

கொடையின் மூலம் மனித மனமும் சமுதாயமும் சமநிலை வளர்ச்சி பெற்று மானுடம் மகத்துவம் பெறும் என்பதை உணரும் அதே நேரத்தில், “கொடை பெறுகிற மக்களே சமுதாயத்தில் இல்லை அனைவரும் கொடை அளிப்பவர்களாக உள்ளனர்” என்ற நிலைக்கு அனைவரின் செயல்பாடும் அமைதல் வேண்டும் என்னும் விழைவும் இக்கட்டுரையின் வழி வலியுறுத்தப்படுகிறது.